DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 33 / 2017 | | Crime No.: | Station : |
| PW : 5 | LW : 6 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | ஜான்சன் | Caste | |
| Father's Name | ஞானப்பிரகாசம் | Calling | வனச்சரகர் (ஓய்வு) |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 63 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 22.07.2024 |

**(எதிரி ஆஜர்)**

**குற்றச்சாட்டு வனையப்பட்ட பின்பு சாட்சிய விசாரணை**

**முதல் விசாரணை :-**

1. நான் இறுதியாக பவானிசாகர் வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக பணியிலிருந்து 2019-ம் டிசம்பர் மாதத்தில் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் 2014-ம் ஆண்டு சத்தியமங்கலம் வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக பணியில் சேர்ந்தேன். ஏற்கனவே மேற்படி வனச்சரக அலுவலகத்தில் நிலுவையிலிருந்த WLOR 08/2013 வழக்குக் கோப்புகளை நான் பார்வையிட்டபோது 01.11.2013-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு வனவர் ராஜேந்திரன், வனக்காப்பாளர் நாகராஜன், கெம்பநாயக்கன்பாளையம் பீட் வனக்காப்பாளர் நவுசர், வேட்டைத்தடுப்பு காவலர் பாபு ஆகியோர் கொண்ட தனிக்குழு எடைமேடைப்பிரிவு கொண்டப்பநாயக்கன்பாளையம் பீட் குத்தியாலத்தூர் காப்புக்காடு, பிசில் மாரியம்மன் கோயில் சரகம், வனச்சராகப் பகுதியில் ரோந்துப் பணி மேற்கொண்டிருந்தபோது அங்கு சந்தேகப்படும்படியாக நடமாடிக்கொண்டிருந்த இரு நபர்களை விசாரிக்கையில் அவரது இருசக்கர மோட்டார் வண்டியில் சாக்குப் பையில் இறந்த அளுங்கின் ஓடு வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவரை விசாரித்துபோது அவர்களின் ஒரு நபரின் பெயர் சடையப்பன் மகன் பெருமாள், கானக்குந்தூர் என்றும், மற்றொருவர் ராமபையலூர் சிக்கரசம்பாளையத்சைச் சேர்ந்த பெருமாள் மகன் ரங்கசாமி என்றும் அவர்கள் காப்புக்காட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வன உயிரினமான அளுங்கினை வேட்டையாடி அதன் ஓடுகளை விற்பனை செய்ய எடுத்து வந்ததாக கூறியுள்ளார்கள்.

2. எதிரி பெருமாள் என்பவர் எவ்வித அச்சுருத்தலோ, ஆசை வார்த்தையோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனவர் ராஜேந்திரன் என்பவர்

வனக்காப்பாளர்கள் நாகராஜன், நவுசத் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர் பாவு ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார். எதிரி ரங்கசாமி என்பவர் எவ்வித அச்சுருத்தலோ, ஆசை வார்த்தையோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை வனக்காப்பாளர் நாகராஜ் என்பவர் வனவர் ராஜேந்திரன் முன்னிலையில் பதிவு செய்தார். அதில் நவுசத் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர் பாவு ஆகியோர் சாட்சிக் கையெழுத்து செய்தார்கள்.

3. பின்பு கைப்பற்றிய பொருளுக்கு வனக்காப்பாளர் நவுசத் என்பவர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். பின்பு எதிரியை கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தியிருந்த வழக்குக் கோப்பினை நான் பார்வையிட்டு வழக்கு சம்பவம் நடந்த இடம் காப்புக்காடு என்பதற்குண்டான அரசிதழ் மற்றும் அரசாணை, அ படிவம் வனச்சரக அலுவலர் தாக்கல் செய்யலாம் என்பதற்குண்டான அரசாணை எண்.63 ஆகியவற்றை நான் தாக்கல் செய்தேன். **காப்புக்காடு என்பதற்குண்டான அரசாணை அ.சா.ஆ.10 ஆகவும், அரசாணை எண். 63 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி 1972ம் வருட வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 9, 27, 39(1)(2)(3)-ன்படி குற்றம் செய்துள்ளதால் 1972ம் வருட வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 51-ன்படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்பதால் எதிரியின் மீது தனிப்புகாரான அ படிவத்தை நான் தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்குரைஞர் ஆஜரில் இல்லை. சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. சாட்சி முடித்து வைக்கப்பட்டது.